CCE-II-RR/PR/PF/NSR/NSPR(A)/888/4005

# A

**ಜೂನ್ 2024 ರ ಪರೀಕ್ಷೆ - 2**

**JUNE 2024 EXAMINATION - 2**

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]
Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 45 ]
Total No. of Questions : 45 ]

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**
**Code No. : 10-T**

**CCE RR/PR/PF/ NSR/NSPR FULL SYLLABUS**

Question Paper Serial No.

**ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

**Subject : First Language — TAMIL**

**(ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. / ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)**

**(Regular Repeater / Private Repeater / Private Fresh / NSR / NSPR)**

ದಿನಾಂಕ : 14. 06. 2024 ] [ Date : 14. 06. 2024
ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-15 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-30 ರವರೆಗೆ ] [ Time : 10-15 A.M. to 1-30 P.M.
ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**Cut here/ಇಲ್ಲಿ ಕತ್ತರಿಸಿ**

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது ( Sealed by reverse jacket) நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது **வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும் (அம்புகுறியிட்டு காட்டியுள்ளபடி). இடது பக்க ஓரத்தை பிரிக்கக்கூடாது.** வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.
6. மாணவர்கள் தங்கள் தேர்வு அனுமதிச்சீட்டில் (Admission Ticket) உள்ள குறியீடும், வினாத்தாளின் குறியீடும் ஒரே மாதிரியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும்.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஓட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**14. 06. 2024**

**Tear here**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக :** **6 × 1 = 6**

1. பொருளுடைய சொற்கள் பல அடுக்கி வருவது

   (A) வினைச்சொல்

   (B) அடுக்குத்தொடர்

   (C) வினைத் தொடர்

   (D) உரிச்சொல்

2. செய்யுளில் இரண்டு சீர்களைப் பெற்று வருவது

   (A) அளவடி (B) நெடிலடி

   (C) குறளடி (D) சிந்தடி

3. கடி அரண் 'கடி' என்பது

   (A) இயற்சொல் (B) உரிச்சொல்

   (C) வினைச்சொல் (D) இடைச்சொல்

4. பகை நாட்டின் பசுக்களைக் கவர்தல்

(A) கரந்தை (B) வெட்சி

(C) உழிஞை (D) தும்பை

5. தங்கம் 'பள, பள' என்று மின்னியது என்றத் தொடரில் 'பள, பள' என்பது

(A) ஆகுபெயர்

(B) இரட்டைக்கிளவி

(C) அடுக்குத்தொடர்

(D) அடிச்சொல்

6. வெண்பாவின் ஓசை

(A) தூங்கல் (B) துள்ளல்

(C) செப்பல் (D) அகவல்

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக :** **4 × 1 = 4**

7. புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்;

   மகாகவி : .......................... .

8. என்னுடைய நாடு, இந்திய நாடு;

   நல் அமுது : .......................... .

9. வயலும் வயல் சார்ந்த இடமும், மருதம்

   காடும் காட்டைச் சார்ந்த் இடம் : .......................... .

10. ‘அயர்வு’ என்பது சோம்பல்

    முனிவு என்பது : .......................... .

**III. ஒரு தொடரில் விடை தருக :** **7 × 1 = 7**

11. மாணிக்கவாசகர் சிவனை எவ்வுருவில் தோன்றுவதாய்க் கூறுகிறார் ?

12. பரந்த அறிவாற்றல் உடையவரைப் பழிப்பது எதனைப் போன்றது ?

13. உலகத்தைப் படைத்தவன் யார் ?

14. அனல் மின்சாரத்தைத் தரும் பொருள் யாது ?

15. அதியமான் நெல்லிக்கனியை யாருக்குக் கொடுத்தான் ?

16. இளைஞனின் நண்பன் எது ?

17. பம்பனது சொந்த ஊர் யாது ?

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 10 × 2 = 20**

18. புதரில் விதைத்த வித்து போன்றவை எவை ?

19. இளையான் குடிமாறர் தபோதனர் பசி தீர்க்கும் வழியினைக் கேட்க, அவர் மனைவி விடுத்த விடையினைக் கூறுக.

20. பெண்கள் எதை வெட்டி விட்டோமென்று கும்மியடித்தனர் ?

21. பொருந்தா இயல்புடைய இரண்டு உயிர்கள் யாவை ?

22. மேலை நாடுகளில் உரையாடல் கலை எவ்வாறு மதிக்கப்படுகிறது ?

23. 'நீதி சாரம்' என்ற நூல் பற்றி எழுதுக.

24. சூரியன் மறையும் காட்சியை ஆசிரியர் எவ்வாறு வருணிக்கிறார் ?

25. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

26. 'அணி' என்றால் என்ன ? அதன் வகைகளை எழுதுக.

27. அடுக்குத் தொடர் என்றால் என்ன ? சான்று தருக.

**V. <u>ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக :</u>** **4 × 3 = 12**

28. உழவுத் தொழிலின் உயர்வையும் உழவர்களின் உயர்வையும் வள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகிறார் ?

29. அனுமன் கையிலிருந்த மோதிரத்தை வாங்கியதும் சீதை அடைந்த நிலை யாது ?

30. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளில் ஒன்றினை எழுதுக.

31. செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விவரி.

**VI. <u>குறிப்பு வரைக :</u>** **2 × 3 = 6**

32. மாணிக்கவாசகர்

33. திருக்குறள்

**VII. <u>கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக :</u>** **1 × 3 = 3**

34. வேற்றுமை அணி

**VIII. <u>இடம் சுட்டிப் பொருள் விளக்குக :</u>** **3 × 3 = 9**

35. ''பால் வார்த்தாலும்
விஷம் குறைக்காது பாம்பு''

36. ''அந்த அம்மையாரை அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது''.

37. ''ஓர் உலகமே பூமிக்கடியில் அமைக்கப்பட்டுள்ளது''.

**IX.** <u>**கீழ் வரும் பழமொழியை விளக்குக :**</u> **1 × 3 = 3**

38. ''நுணலும் தன் வாயால் கெடும்''.

*அல்லது*

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்''.

**X.** <u>**அடிபிறழாமல் எழுதுக :**</u> **1 × 4 = 4**

39. ''சோதியாய்த் தோன்றும் .....'' எனத் தொடங்கும் 'திருவாசகப்' பாடலை எழுதுக.

*அல்லது*

''முளி தயிர் பிசைந்த ..... '' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலினை எழுதுக.

**XI.** <u>**எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக :**</u> **2 × 4 = 8**

40. உனக்கு தெரிந்த விடுகதைகள் இரண்டினை எழுதி விளக்குக.

41. கிராமத்தின் மாலை நேரக் காட்சிகளை கி. ராஜநாராயணன் வழிநின்று விளக்குக.

*அல்லது*

பிறர்க்கென வாழ்வோரின் அரும்பெரும் பண்புகள் எவையெவை என்று இளம்பெருவழுதி பட்டியலிடுகின்றார் ?

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக :** **1 × 4 = 4**

42. ''மலைகளிலே உயர்மலையை மகிழந்தணியும் நாடு
மாநதியுள் வானதியே மல்குதிரு நாடு
உலகில் விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு
ஒண்தொழிலும் வாணிகமும், ஓங்கியசீர் நாடு''.

*அல்லது*

''குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே
மயரிகள் அல்லராய் மாண்புடை யார்ச்சேரும்
திருவுந்தீர் வின்றேல் இனிது''.

**XIII.** **பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :**

**(2 × 2 = 4) 1 × 4 = 4**

43. சூரியன் தன் கிரணக்கைகளால் கடவுளைத் தொழவும் பறவைகள் தன் இன்னோசையால் ஆடிப்பாடி வணங்கவும், மரங்களெல்லாம் மலர்களைத் தூவி வழிபடவும், ஐம்பூதங்கள், தன் தொழில் செய்து போற்றவும், ஒலிக்கும் கடல் தன் அலைகளால் துதிக்கவும் செய்ய மனமே ! நீ மட்டும் இறைவனை வாழ்த்தி வணங்காதது ஏனோ ?

**வினாக்கள் :**

a) சூரியன் எவ்வாறு கடவுளைத் தொழுகிறான் ?

b) மரங்கள் எவ்வாறு இறைவனை வழிபடுகின்றது ?

**XIV.** மடல் எழுதுக : **1 × 5 = 5**

44. சந்திரனில் கால் பதித்த சந்திராயன்-3 குறித்து உன் கருத்துக்களை உன் நண்பனுக்கு எழுதவும்.

*அல்லது*

நம் ஊரில் தொழிற்சாலைகள் அமைத்து இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தருமாறு மாவட்ட ஆட்சி ஆணையருக்கு கடிதம் எழுதுக.

**XV.** <u>கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக:</u> **1 × 5 = 5**

45. ''வேளாண் தொழிலின் முன்னேற்றமும் மற்றும் முக்கியத்துவமும்''

*அல்லது*

''கைபேசியின் பயன் குறித்து எழுதுக.''

DO NOT WRITE ANYTHING HERE